பெறுநர். 23.03.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : மின்வாரம் - நிர்வாகம் - 3-ம் நிலை - இளநிலை மின் பொறியாளர் 2-ம் நிலை (மின்னியல்) – உள்முகத்தேர்வு நியமனத்தில் - ஏற்படும் ஊதிய பாகுபாட்டினை சரி செய்திடக் கோருதல் .

களப்பிரிவில் 2009-2012-ம் ஆண்டுகளில் நூற்றுக்கணக்கானோர் LI/CI- யிலிருந்து (F.M.IGr. Spl.Gr F.M. ஆகாமல்) JE II Gr. பதவி உயர்வு பெற்றார்கள். இவர்களைவிட இளையவர்கள் சில வருடங்களுக்குப்பிறகு LI/CI ஆனவர்கள், F.M.IGr. Spl.Gr F.M பதவி உயர்வு பெற்றபின் 2014-ல் JE II Gr. பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

Spl.Gr F.M. சம்பளம் மற்றும் தர ஊதியம் ரூ.10,000--34,800+5,100 ஆகும். Spl.Gr F.M.-லிருந்து JE II Gr.பதவி உயர்வு பெறுவோர்க்கு ஏற்கனவே பெற்று வரும் ஊதியத்தில் 3% ஊதிய ஆண்டுயர்வு வழங்கப்படுகிறது. தர ஊதியம் குறைக்கப்படாமல் ரூ.5,100- தொடர்ந்து வழங்கப் படுகிறது.

ஆனால் Spl.Gr F.M. ஆகாமல் நேரடியாக JE II Gr. பதவி உயர்வு பெற்றவர்களுக்கு ரூ.9600--34,800+ரூ.4300- தர ஊதியம் வழங்கப்படுகிறது.

இவ்வாறு L.I./JE II Gr./ பொறுப்புகளில் 4 அல்லது 5 வருடம் முதியவராக இருந்தும் தங்களுக்குப் பின் 4 அல்லது 5 ஆண்டுகள் கழித்தபின் JE II Gr ஆகிறவர்களை விட சம்பளம் மற்றும் தர ஊதியம் குறைவாகவும், ஒட்டு மொத்த சம்பளத்தில் மாதம் சுமார் ரூ.5000- குறைவாகப் பெறுவதாலும் மனம் துவண்டு கவலை கொண்டுள்ளார்கள்.

இது தொடர்பாக பணியாளர்கள் தங்களுக்கு சமர்ப்பித்துள்ள முறையீட்டின் நகல்களை இணைத்துள்ளோம்.

தாங்கள் அருள்கூர்ந்து முறையீட்டினைப் பரிசீலித்து பணியாளர்கள் ஊதிய பாகுபாட்டினை சரிசெய்திடும் வகையில் ஒரு பொதுவான உத்திரவை வழங்கிடுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்

இணைப்பு : 30 விண்ணப்பங்கள்.